Ontario

*பின்னணி*

**நிதி அமைச்சு**

## ஒன்டாரியோ சாரதிகளைப் பாதுகாப்பதும் வாகன காப்புறுதித் துறையின் செலவைக் குறைப்பதும்

ஆகாஸ்ட் 23, 2013

நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும் வாகனக் காப்புறுதியில் அவர்கள் பணத்தைச் சேமிப்பதற்குமான நடவடிக்கையை ஒன்டாரியோ தொடர்ந்து எடுத்துவருகின்றது.

வாகனக் காப்புறுதி செலவு மற்றும் விலைக் குறைப்பு திட்டத்தின் பாகமாக, வாகனக் காப்புறுதித் திட்டத்தின் சேமிப்புகள் நுகர்வோரைச் சென்றடைவதை பின்வருவனவற்றின் மூலம் உறுதிப்படுத்த ஒன்டாரியோ உதவுகிறது:

- காப்புறுதி வழங்குபவர்கள் விலைகளைப் பதிவுசெய்யும்படி கேட்பதற்கான அதிகாரத்தை ஒன்டாரியோவின் நிதிச் சேவைகள் ஆணையகத்தின் (FSCO) மேலதிகாரிக்கு வழங்குதல்
- எதிர்பாரா செலவுகளைத் தவிர்ப்பதற்கு, விபத்து நலங்களின் சட்டபூர்வ அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள மேலதிகாரியின் வழிமுறைகளை செல்லுபடியாக்குதல்.
- குறிப்பாக மோசடித் தடுப்புப் பகுதியில், மேலதிகாரியின் விசாரனை அமலாக்க அதிகாரத்தை விரிவுபடுத்தி நவீனமயப்படுத்தல்.

FSCO வின் அங்கீகரிக்கப்பட்ட விலைக் குறைப்புகளின் முதலாவது அறிக்கை ஜனவரி 2014 இல் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. அமல்ப்படுத்தப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளின் மூலம், முதலாவது அறிக்கையானது மூன்று தொடங்கி ஐந்து சதவிகிதம் வரையிலான அங்கீகரிக்கப்பட்ட சராசரி விலைக் குறைப்பைக் காட்டுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

### ஒன்டாரியோவில் வாகன காப்புறுதிக்கு உண்மையான நல்ல மாற்றங்களை வழங்குதல்

2003-04 இல், விலைகளைக் குறைத்து அந்தச் சேமிப்புக்களால் ஒன்டாரியோ சாரதிகள் பயனடைவதற்காக, வாகனக் காப்புறுதி சீரமைப்பின் முதலாவது தொகுதியை அரசாங்கம் அறிமுகம் செய்தது. நுகர்வோர் மற்றும் நலன்பெறு குழுக்களின் கலந்தாலோசிப்போடு, காப்புறுதி நிறுவனங்கள் தங்கள் விலைகளை சராசரி 10 சத விகிதத்தால் குறைப்பதற்கு வழிவகுக்கும் சேமிப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

### தெரிவுகளை வழங்குவதற்காகவும் ஓட்டுனர்கள் பணத்தை சேமிப்பதற்காகவும் வாகன காப்புறுதியில் சீர்திருத்தம் செய்தல்

செப்டெம்பர் 2010 இல், ஒன்டாரியோ வாகனக் காப்புறுதித் திட்டத்தின் கோரிக்கைச் செலவுகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தனது இரண்டாவது பாரிய தொகுதியை அறிமுகம்செய்தது. இந்த சீர்திருத்தங்கள் விலைகளைக் குறைத்து, நுகர்வோருக்கான தெரிவுகளை அதிகரித்தது. அத்துடன், நுகர்வோருக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளுக்கான துரிதமான வழிமுறைகளை உறுதிசெய்துள்ளது. வாகன விபத்தில் காயமடைந்தோருக்கான அத்தியவசிய சிகிச்சைக்கு துரிதமான வழியை அமைப்பதற்காக, காப்புறுதித் தொகுதிக்குள் இருக்கும் நிர்வாக மற்றும் ஏனைய படிமுறைகளையும் எழிமையாக்கியது.

இந்த மாற்றங்களின் மூலம், வாகனக் காப்புறுதிக் கட்டணத்தைக் குறைக்க உதவுவதற்கும் மேலதிக நிலை மருத்துவ மற்றும் புனர்வாழ்வுக் காப்புறுதியை வாங்காகவும், சாரதிகளுக்கு புதிய தர வாகனக் காப்புறுதி வழங்கப்படுகிறது. இந்த நடவடிக்கை தங்களது பாதுகாப்புத் தேவைகள் மற்றும் வருமானம் ஆகியவற்றிற்கு ஏற்ப சாரதிகள் காப்புறுதியைக் கொள்வனவுசெய்ய வழிவகுக்கும் அதே வேளையில் ஒன்டாரியோவில் காப்புறுதிக் கட்டணத்தையும் நிலைப்படுத்துகிறது.

சீர்திருத்தங்கள் பின்வருவனவற்றை உட்படுத்துகின்றது:

- மருத்துவ மற்றும் புனர்வாழ்வு நன்மை, ஆள்ப் பராமரிப்பு, வீட்டுவேலை மற்றும் வீட்டுப் பராமரிப்புச் செலவுகள், பராமரிப்பு வழங்குபவர் நன்மைகள், அநீதி இழப்பீடு மற்றும் உடைமைச் சேதத்திற்கு இழப்பீடு ஆகியவற்றின் பேரில் பல்வேறுபட்ட தெரிவுகளை வழங்குதல்.
- கடன் மதிப்பீட்டு பாவனையின் தடையை வலுப்படுத்துதல், தாமதங்கள் மற்றும் விலைகள் கூறப்படும்போது உபயோகிக்கப்படும் கேள்விக்கிடமான பரிசீலனை முறைகள் ஆகியவற்றிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.
- பரிமாற்ற செலவுகளைக் குறைத்து, விபத்து நன்மைப் பணமானது விபத்துக்குள்ளானவரைப் பராமரிப்பதற்கு அதிகம் செலவிடப்படுவதை உறுதிசெய்ய பல படிமுறைகளை எழிமையாக்குதல்.

சீர்திருத்தங்களின் விளைவாக, விலைகள் குறைக்கப்பட்டதோடு கட்டணங்கள் நிலைப்படுத்தப்பட்டன. எதிர்காலத்தில், வாகனக் காப்புறுதி நலன்களை மருத்துவ ஆதாரங்களின் அடிப்படையில் நிர்ணயிப்பதைப் பற்றி அரசாங்கம் தொடர்ந்தும் சிந்திக்கும். சிறு காயங்களுக்கான பராமரிப்பு நெறிமுறைத் திட்டத்தின் முன்னேற்றம்பற்றிய இடைக்கால அறிக்கை ஒன்றை இந்த வருடம் வழங்கும்படி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்பதன் மூலம் இதைச் செய்யும்.

விபத்து நலன்களின் சட்டபூர்வ அட்டவணையில் உள்ள பேரழிவு வலிமையிழப்புக்கான சொற்பொருள் விளக்கத்தை மாற்றுவதற்கான ஆய்வையும் அரசாங்கம் நிறைவுசெய்யும்.

மேலுமாக, பாதுகாப்பான வாகன ஓட்டுதலுக்கு சன்மானம் வழங்குவதற்கும் செலவு மற்றும் காப்புறுதிக் கட்டணங்களைக் குறைப்பதற்கும் மேலதிக புதிய நடவடிக்கைகளை ஆய்வுசெய்வதை அரசாங்கம் தொடரும்.

**வாகனக் காப்புறுதி மோசடி எதிர்ப்புப் பணிக்குழு (டாஸ்க் ஃபோஸ்)**

2011 இன் வரவுசெலவுத் திட்டத்தில் ஒன்டாரியோவின் வாகனக் காப்புறுதி மோசடி எதிர்ப்புப் பணிக்குழு அறிவிக்கப்பட்டது. பணிக்குழுவானது ஜுலை 2011 இல் நிறுவப்பட்டு அதன் இறுதி அறிக்கை யை நவம்பர் 2012 இல் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தது.

ஜனவரி 2013 இல், பணிக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் சிலவற்றை கருத்தில் கொள்ளும் முகமாகவும், மோசடியை எதிர்த்துப் போரிடவும், நுகர்வோரைப் பாதுகாக்கவும் முன்கூட்டியே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மேல் கட்டியெழுப்பவும் அரசாங்கம் ஆரம்ப நடவடிக்கை யை எடுத்தது.

இந்த திருத்தங்கள் பின்வருவனவற்றின் மூலம் வாகனக் காப்புறுதி மோசடியைத் தவிர்க்க உதவுவதோடு நுகர்வோரையும் பாதுகாக்கின்றன:

- பலன் கோருகிறவர்களுக்கு காப்புறுதி வழங்குவோர் கோரிக்கையைத் தரமறுப்பதற்கான எல்லாக் காரணங்களையும் வழங்குவதைத் தேவைப்படுத்தல்
- பலன் கோருகிறவர்கள் சார்பாக நன்மைக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட விவரமான அறிக்கையை அவர்களுக்கு மாதம் இருமுறை வழங்குதல்.
- பலன் கோருகிறவர்கள் உடல்நல கிளினிக்குகளுக்கு சென்றதை உறுதிப்படுத்துவதைத் தேவைப்படுத்தல்.
- பொருட்களையும் சேவைகளையும் வழங்குவோர், காப்புறுதி வழங்குவோரிடம் அதிக கட்டணம் வாங்கினால் அவர்களை தண்டனைக்குள்ளாக்குதல்.
- சேவை வழங்குவோர் நுகர்வோரிடம் வெற்றுக் கோரிக்கைப் பத்திரங்களில் கையொப்பமிடும்படி கேட்பதைத் தடைசெய்தல்.

---

Andrew Chornenky, அமைச்சரின் அலுவலகம், (Minister’s Office) 416-325-8679
Marc Pichette, நிதி அமைச்சு,(Ministry of Finance) 416-314-1587